நாள்: 24.12.2020

செ.வெ.எண்: 995

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

## செய்திக்குறிப்பு

**தமிழில் கருத்தாழமிக்க அரிய கலை நூல்களைப் பதிப்பிக்க நூலசிரியர்களுக்கு, நூல் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 நூல்களுக்கு ரூ.10.00 இலட்சம் நிதியுதவி வழங்கும் தமிழக அரசின் திட்டம்.**

தமிழகத்தில் கலை சார்ந்த நூல்களை எழுதும் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கருத்தாழமிக்க அரிய தமிழ் நூல்களை பதிப்பிக்க, நூல் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 நூல்களுக்கு ரூ.10.00 இலட்சம் வழங்கிடும் திட்டத்தை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நிறைவேற்றிட தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் நூலாசிரியிர்கள், தமிழில் கருத்தாழமிக்க, கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க, பின்வரும் முகவரிக்கு 29.01.2021–ம் தேதி மாலை 05.00 மணிக்குள் விண்ணப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்திட்டத்தில் பங்கு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் பெறவும் மற்றும் நிபந்தனைகள் பற்றி தெரிந்து கொள்ளவும் கீழ் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்:–

**உறுப்பினர்–செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,**
**31, பொன்னி, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,**
**சென்னை–600 028.தொ.பே.044–2493 7471.**
**மின்னஞ்சல்– tneinm@gmail.com, tneinm@tn.gov.in**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 09

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31, பி.எஸ்.குமாரசாமி சாலை, சென்னை–600 028
தொலைபேசி – 044–2493 7471

**தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க நூலசிரியர்களுக்கு, நூல் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 நூல்களுக்கு ரூ.10.00 இலட்சம் நிதியுதவி வழங்கும் தமிழக அரசின் திட்டம்.**

(மன்றத்திற்கு விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 29–01–2021 மாலை 05.00 மணிக்குள்)

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் / நூலாசிரியர் பெயர் | : | |
| 2 | விண்ணப்பிக்கும் / நூலாசிரியரின் நிலையான முகவரி மற்றும் தொலைபேசி எண் / கைபேசி எண்<br><br>மின்னஞ்சல் முகவரி | : | |
| 3 | வயது (முடித்த ஆண்டுகள்)<br><br>பிறந்த தேதி | : | |
| 4 | விண்ணப்பிக்கும் நூலாசிரியர் ஏற்கனவே நூற்பதிப்பு செய்துள்ளவரா? ஆம் எனில் நூற்பதிப்பு பற்றிய விவரம் / தனித்தாளில் இணைக்கப்பட வேண்டும் | | |
| 5 | விண்ணப்பிக்கும் நூலாசிரியர் ஏற்கனவே நூற்பதிப்பு செய்ய அரசு நிதியுதவி பெற்றுள்ளவரா ? ஆம் எனில் நூற்பதிப்பு பற்றிய விவரம் / அரச உதவி பெற்ற விவரம் தனித்தாளில் இணைக்கப்பட வேண்டும் | : | |
| 6 | நிரந்தர கணக்கு எண் (PAN No.) | : | |
| 7 | வங்கியின் பெயர் , கணக்கு எண் (ம) முகவரி | : | |
| 8 | நிதியுதவி கோரப்படும் புதிய நூலின் தலைப்பு மற்றும் நூல் கருத்துரு ( 3 பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) | : | |

| | | | |
|---|---|---|---|
| 9 | நூல் பதிப்பு திட்ட மதிப்பீட்டின் முழு விவரம் (குறைந்தது 500 நூல் எண்ணிக்கை) | : | |
| 10 | கருத்துரு கண்டறியப்பட்ட மூல நூல் மற்றும் அதன் ஆசிரியர் பெயர் | | |
| 11 | நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள இரண்டு வல்லுநர்கள் பற்றிய விவரம் | | 1.<br><br>2. |

<u>நிபந்தனைகள்:–</u>

1. நான் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் நூலை புதிதாக படைத்திருக்கின்றேன்.

2. இதற்கு முன் இந்நூல் அல்லது இதே கருத்துருக் கொண்ட பிற நூல் எதுவும் பதிப்பித்து வெளியிடப்படவில்லை

3. நமது பண்பாடு, கலாச்சாரம், மொழி, கலைகள், ஒருமைப்பாடு போன்றவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இந் நூலில் இடம் பெறாதவாறு அமையப் பெற்றுள்ளது

4. அரசு அல்லது அரசின் திட்டங்களை விமர்சனம் செய்யாதவாறும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் இந்நூல் அமையப்பெற்றுள்ளது

5. நூலினைப் பதிப்பிக்கத் தெரிவு செய்யும் பட்சத்தில் 50 எண்ணிக்கையில் நூல்களை, தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஒப்படைப்பேன்.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும், விதிமுறைகள் அனைத்தும் படித்து அறிந்துகொண்டதன் அடிப்படையில், விதிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றுவேன் எனவும், உறுதி கூறுகிறேன்.

(விண்ணப்பதாரரின் கையொப்பம்)

பி.கு. – கூடுதல் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட வேண்டும்.